# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 57/2016

ஆணை எண். 134/2016

நாள் : 02/08/2016

திரு. ஆ. ராமமூர்த்தி,
அழகாபுரம் புதூர்,
சேலம். – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர் / உதவிப் பொறியாளர்,
அஸ்தம்பட்டி வார்டு,
சேலம் மாநகராட்சி,
சேலம்–636 007 – எதிர் மனுதாரர்

சேலம் மாநகராட்சி, அழகாபுரம் புதூர், பிடாரி அம்மன் கோயில் தெருவில் வசிக்கும் திரு. ஆ. இராமமூர்த்தி என்பவரின் 23.10.2015 மற்றும் 10.12.2015 நாளிட்ட முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 29.01.2016 அன்று பெறப்பட்டு, 51/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாநகராட்சி, அழகாபுரம் புதூர், பிடாரி அம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த திரு. ஆ. இராமமூர்த்தி என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் உதவிப் பொறியாளர் லஞ்சமாகவே, மாநகராட்சிக்கு சேர வேண்டிய பணத்தை எடுத்துக்கொண்டு, குடிநீர் இணைப்பு வழங்கியுள்ளார் என்றும், தெருக்களில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார் என்றும் ஆனால் தெருக்குழாயில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்திடம் முறையீடு செய்துள்ளார்.

மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக 27.07.2015 அன்று மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் சட்டத்திற்கு புறம்பாக குடிநீர் இணைப்பு வழங்க உதவிப் பொறியாளர் திருமதி கலைவாணி, திரு. மணி என்பவரிடம் லஞ்சம் வாங்கியுள்ளார் என்றும் லஞ்சம் வாங்கும்போது தான் அருகில் இல்லை என்றும் எவ்வளவு வாங்கினார் என்ற விவரமும் தனக்குத் தெரியாது என வாக்குமூலம் அளித்தார். 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2(a)(iii) –ல் " ஊழல், சாதமாக செயல் படுதல், உறவினர்களுக்கு தனிச் சலுகை அளித்தல் அல்லது நேர்மைக் குறைபாடு " போன்றவை குற்றச்சாட்டு என வரையறை செய்யப்பட்டுள்ளது.

இந்நேர்வில், மேற்படி சட்டப்பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி குற்றச் சாட்டுகளுக்கு எதிர் மனுதாரர் உள்ளாக்கப்பட்டுள்ளார் என்பதற்கு ஆதாரங்கள் எதுவும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை. விசாரணையின் பொழுது மனுதாரர் அளித்துள்ள வாக்குமூலம் பொது படையாகவே உள்ளது. எனவே யூகத்தின் அடிப்படையில் மாநகராட்சி அலுவலர்கள் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை மேற்கொள்ள இயலாது எனத் தெரிவித்து இந்நேர்வின் மீதான நடவடிக்கையை முடித்து வைத்து ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெறுநர்

திரு. ஆ. ராமமூர்த்தி,
பிடாரி அம்மன் கோயில் தெரு,
அழகாபுரம் புதூர்,
சேலம் – 636 016.

உதவி ஆணையர் / உதவிப் பொறியாளர்,
அஸ்தம்பட்டி வார்டு,
சேலம் மாநகராட்சி,
சேலம்–636 007

/உண்மை நகல்/

செயலாளருக்காக.